

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தார். உடன் துரை வைகோ எம்.பி. உள்ளார்.



சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில், நேற்று முன்தினம் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுப் பள்ளிகளில் 2025–2026 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை அதிகரித்த 179 தலைமையாசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தரமோகன், இயக்குநர்கள் முனைவர் ச.கண்ணப்பன், முனைவர் பூ.ஆ.நரேஷ், அரசு அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு மாவட்டம், பவானி சாலையில் தொப்பூர் மேட்டூர் பவானி ஈரோடு சாலை நடைபாதையுடன் கூடிய வண்டிப்பாதை அகலப்படுத்துதல், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் உயர் மட்ட பாலம் ரூ.33.62 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகளை தொடங்கி வைத்தார்.உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வே.செல்வராஜ், மண்டல தலைவர் பி.கே.பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், பகுதி செயலாளர்கள் வி.சி. நடராஜன், பொ.இராமச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

### கழக அரசின் சீரிய நடவடிக்கைகளால் முன்னெப்போதும் இல்லாத வகையில்

### 2025–ல் குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி!

# குறுவை - சம்பா - தாளடி பருவங்களில் நெல் சாகுபடிக்கான முன்னேற்பாடுகள்!

## வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை!

சென்னை, அக்.9–

குறுவை – சம்பா – தாளடி பருவங்களில் நெல் சாகுபடிக்காக கழக அரசு மேற்கொண்டு வரும் விரிவான முன்னேற்பாடு கள் குறித்து வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கமான அறிக்கை விடுத்துள்ளார்.

2025–26ஆம் ஆண்டு குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவங்களில் நெல் சாகுபடி குறித்து வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை வருமாறு:

2021ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துவருகிறது. வேளாண்மை நிதிநிலை அறிக்கை



யில் விவசாயிகளின் நலன் காக்கவும், அவர்களின் பொருளாதாரம் மேம்படவும் எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு மானியங்கள் வழங்குவதுடன், சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களான விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் தங்குதடையின்றி உரிய காலத்தில் கிடைத்திடவும் உறுதி செய்கிறது.

இதன் அடிப்படையில், நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் குறுவை சிறப்புத்தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டிலும் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட்டில் முதன்முறையாக கார்/ குறுவை/சொர்ணவாரி பருவத்திற்கான சிறப்புத் தொகுப்புத் திட்டம் 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொள்ள மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜுன் 12ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு எடுத்த சீரிய நடவடிக்கைகளால் முன் எப்போதும் இல்லாத வகையில் 2025ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டைவிட 2.25 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.

இந்நிலையில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடி பரப்பு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குறுவை நெல் வரத்து மிகஅதிகமாக உயரும் என்பதால் 02.10.2025 அன்று நெல் கொள்முதலுக்கான முன்னேற்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக ஆய்வு செய்தார்கள்.

தற்போது, டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெறுவதால், சம்பா நெற்பயிர் சாகுபடி அடுத்த பத்து தினங்களில் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுநாள்வரை, சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி 2.64 இலட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே வேளையில் 5.50 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு, குறுவை பருவத்தில் அதிகப்பரப்பில் நெல்சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான சூழ்நிலை நிலவியதால் இயல்பாக சம்பா பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், குறுவை சாகுபடி மேற்கொண்டதாலும், தற்போதுவரை குறுவை நெல் அறுவடை 52 சதவீதம் மட்டுமே செய்யப்பட்டிருப்பதாலும், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தொடர் மழை இருப்பதாலும் சம்பா நெல் சாகுபடி தாமதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பரப்பான 6.13 இலட்சம் ஏக்கரில் 80 சதவீத பரப்பில் அதாவது சுமார் 5 இலட்சம் ஏக்கரில் தாளடி பருவ நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தற்போது 5,438 ஏக்கரில் நெல் நாற்றங்கால் தயார் நிலையில் உள்ளதாலும், மேட்டூர் அணையில் பாசனத்திற்கு போதிய நீர் இருப்பு (83.14 டி.எம்.சி) உள்ளதாலும், வடகிழக்கு பருவமழை பரவலாக பல்வேறு பகுதிகளில் பெய்துவருவதாலும், மத்திய மற்றும் நீண்டகால நெல் இரக விதைகள், போதுமான அளவில் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளதாலும், சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி இயல்பு பரப்பான 13 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகள் அனைவரும் தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளுமாறும், விதை தேவைக்கு அருகாமையிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

### அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரித்த 179 தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்!

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்ந்தெடுத்த 167 உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, அக்.9–

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (07.10.2025) பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுப் பள்ளிகளில் 2025–2026–ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை அதிகரித்த 179 தலைமையாசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயி லாக தேர்ந்தெடுக்கப்பட்ட 167 உதவியாளர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வைத்த ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2025–26–ஆம் கல்வியாண்டின் மானியக் கோரிக்கைகளில் அறிவித்த அறிவிப்புகளில் ஒன்றான பள்ளிக் கூடங்களில் நம்முடைய தலைமை ஆசிரியர்கள், பள்ளிக்கூட செயல்பாடுகளை பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள பல்வேறு நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலமாக கல்வி ஆண்டில் அதிகப்படியான மாணவர்களை சேர்க்கக் கூடிய பள்ளிக்கும் அந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் இதுபோன்ற விருதுகள் வழங்குகின்ற ஒரு விழா எடுக்கப்படும் என்கின்ற அறிவிப்பினை இன்று நிறைவேற்றுகின்ற வகையாக இவ்விழா நடைபெறுகின்றது.

**‘கலைச் சிற்பி’ பயிற்சி!**

இங்கே வருகை தந்திருக்கின்ற ஏறத்தாழ 179–க்கும் மேற்பட்ட தலைமை யாசிரியர்கள் அதிகப்படியான மாணவர்களை சேர்த்துள்ளமைக்கு முதலில் வாழ்த்துகளையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சர் அவர்கள் மார்ச் 1ஆம் தேதியன்று அரசுப்பள்ளி மாணவர் சேர்க்கையினை தொடங்கி வைத்தார்கள். ஜூலை மாதம் 30ஆம் தேதி வரை நான்கு இலட்சம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். திறன் என்ற திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோல நம்முடைய தலைமை ஆசிரியர்கள் அரசு பள்ளியில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கு பாராட்டுக்கள் தெரிவித்துள்ளோம். விளையாட்டில் சாதனை புரிந்த அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துள்ளோம். அதேபோல் கலைச்சிற்பி என்கின்ற ஒரு பயிற்சியினை தொடங்கி வைத்திருக்கிறோம்.

இப்படி நாம் என்னவெலாம் சொன்னோமோ அதெ ல்லாம் தொடர்ந்து நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம், இன்னும் நிறைவேற்றுகின்ற பணியை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

ஒட்டுமொத்தமாக அனைத்துப் பெற்றோர்களுமே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த நம்முடைய மாநில கல்விக் கொள்கையை நாம் நிறைவேற்றுகின்றோம். இப்படி ஒவ்வொன்றையும் நாம் பார்த்து பார்த்து செதுக்கி செதுக்கி ஒவ்வொரு திட்டத்தையும் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

குறிப்பாக இன்று திருச்சி மாவட்டத்தில் ரோட்டரி சங்கத்தை சார்ந்திருக்கின்ற Care for Schools என்ற அமைப்பின் NSNOP என்ற திட்டம் மூலம் பள்ளிகளுக்கு பங்களிப்பு வழங்க தயாராக இருக்கின்றோம். 1000 பள்ளிக்கூடம் என்று சொன்னதற்கு நாங்கள் 5000 பள்ளிக்கூடத்துக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு நாங்கள் செய்கின்றோம் என்ற உறுதி அவர்கள் தந்து இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் நம்முடைய துறை மீது அதிக அக்கறையாக இருப்பதால் அவர் அறிவித்த திட்டங்களை நிறைவேற்றுகின்ற விதத்தில் நாங்கள் காட்டுகின்ற வேகமாகவும், அரசாங்கத்தின் மீதும் இந்த துறையின் மீதும் அவர்க



ளுக்கு இருக்கின்ற நம்பிக்கைதான் இது போன்ற NGO நம்முடன் இணைந்து பணியாற்ற காத்துக் கொண்டிருக்கின்றார்கள். கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் முழுமையாக உள்வாங்கி களத்திலே ஒரு வெற்றிகரமான திட்டமாக மாற்றிக் காட்டக்கூடிய வல்லமை யாருக்கு இருக்கின்றது என்று சொன்னால் இங்கே அமர்ந்திருக்கின்ற தலைமையாசிரியர்களுக்கு இருக்கிறது.

சமீபத்தில் கற்றல் அடைவு அறிக்கை வெளிவந்தவுடன் ஜுன் மாதம் 25 ஆம் தேதி முதல் செப்டம்பர் இறுதிவரை 38 மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று ஆசிரியர்களிடம் உரையாடி வந்திருக்கிறேன். எத்தனை திட்டங்கள் கொண்டு வந்தாலும் Futuristic Skill சார்ந்ததாக நாங்க கொண்டு வருகிறோம் என்று சொன்னாலும் அடிப்படை என்று சொல்லக்கூடிய Foundation எப்படி இருக்கிறது என்பதற்காக நடத்தப்பட்டதுதான் இந்த கற்றல் அடைவு ஆய்வு. அந்த கற்றல் அடைவு ஆய்வில் நம்முடைய தலைமை ஆசிரியர்கள் உறுதியோடு பேசிய அந்தப் பேச்சு எங்களுக்கு ஊக்கம் தருவதாக உள்ளது.

அடுத்த கற்றல் அடைவு ஆய்வு நடத்த நீங்கள் வரும்போது எங்களை பாராட்டுவதற்காக மட்டும்தான் சார் நீங்க வருவீங்க என்று சொன்ன அந்த உறுதியான வார்த்தைக்கு முதலில் நன்றியை இந்த இடத்திலிருந்து நாங்கள் சொல்லுகின்றோம். Acceptance அது ஒரு Action Plan ஆக மாறுகிறது. அது சார்ந்து நாங்க எங்களை தயார்படுத்திக் கொள்கிறோம் என்று சொல்லும் பெருமதிப்புக்குரிய ஆசிரியப் பெருமக்களை நாம் பெற்றுள்ளோம். அவர்களுக்கான ஒரு பாராட்டு என்று வரும்பொழுது பள்ளிக்கூடத்தில் இருக்கிற தலைமை ஆசிரியர்கள் ஒருத்தருக்கான பாராட்டாக இல்லாமல் அப்பள்ளியில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள், ஆசிரியர்கள், சத்துணவு பணியாளர்கள் எல்லாருக்குமான பாராட்டாக இது அமைகின்றது.

**கல்வி – மிக மிக சக்தி வாய்ந்த ஆயுதம்!**

நம்மைப் பொறுத்தவரைக்கும் மனித வள மேம்பாட்டை உருவாக்க வேண்டும் என்று சொன்னால் அது கல்வியால்தான் முடியும். கல்வி என்ற அந்த ஒரு வார்த்தையை பற்றி நாம் பேசும் பொழுது ஒட்டு மொத்த சமூகத்தைப் பற்றி நாம் பேசுகின்றோம். இந்த எண்ணத்தை பெருக்கின்ற அளவுக்கு கல்வி என்பது மிக மிக ஒரு சக்தி வாய்ந்த ஒரு ஆயுதமாக நாம் நினைக்கிறோம்.

ஆசிரிய பெருமக்களுக்கு இது போன்ற விருதுகளை நாங்கள் தருகின்றோம். இதன் மூலமாக ஊக்கப்படுத்துகின்றோம் என்று சொன்னால் அடுத்த கல்வி ஆண்டு இந்த 179 என்பது இரு மடங்காக ஆக வேண்டும் என்று உங்களைப் பார்த்து மற்ற ஆசிரியர்களும் நாங்களும் இந்த கல்வியாண்டில் அதிகப்படியான மாணவர்கள் சேர்க்கப் போகிறோம் என்ற உறுதியினை ஏற்க வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உதவியாளர் அனை வரையும் பள்ளிக் கல்வித் துறை சார்பாக, வருக வருக வருக என்று நான் வரவேற்கிறேன்.

இன்று பணியாணை வாங்கிவிட்டீர்கள் என்றால், அடுத்த ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கப் போகின்ற அந்த மிகப்பெரிய பணியில், எங்களோடு நீங்களும் இணைந்து இருக்கிறீர்கள் என்று சொல்லத்தக்க விதத்தில்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்துக் கொண்டிருக்கின்றது. ஒரு கோப்பு வந்ததென்றால், அது வெறும் கோப்பாக பார்க்காதீங்க, வெறும் ஒரு பேப்பராக பார்க்காதீங்க. ஒவ்வொரு கோப்பிற்கும் பின்னால் ஒரு மனிதனுடைய வாழ்க்கை அடங்கி இருக்கிறது என்பதை மிகவும் நினைவில் கொள்ள வேண்டும்.

உங்களைப் பாராட்டுவதைக் காட்டிலும் உங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பாராட்டி, உங்கள் குடும்ப த்தைச் சார்ந்த ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்துல நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பணியாற்றும்போது இன்னும் உங்களால் என்னென்னல்லாம் படிக்க முடியுமோ தயவு செஞ்சு படியுங்கள், தொடர்ந்து உங்களால் உங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. சந்தர மோகன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) எம்.ராமசாமி, அரசு அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி

### அக்டோபர் 9 (1992)



**திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ. வீராசாமி

### அக்டோபர் 9 (2020)



**தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.**

**நாகை நகர வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**